உ

கடவுள் துணை.

சந்திரவதி புலம்பல்,

இரண்டாம்பாகம்.

T. சாரதா புத்தகசாலை அதிபர்

T. S. துரைசாமி முதலியார்

அவர்களால்

பதிப்பிக்கப்பட்டது.

1923.

முராஹரி பிரஸ், சென்னை.

உ

கடவுள் துணை.

சந்திரவதிபுலம்பல்

விருத்தம்.

மைந்தனைக்கரத்திலேந்தி மயானத்தில்கொண்டுவந்து
செந்தணல்மூட்டி தேவதாசனையதில்மேல்வைத்து
சிந்தையுநொந்துவுள்ளம் சிதறியேபுலம்பும்போது
வந்தரிச்சந்திரதோட்டி வந்துமேகேட்கலுற்றான்.

வசனம்.

இவ்விதமாக தேவதாசனைவளர்த்தி தீமூட்டி சந்திரவதி புலம்புவதைப்பார்த்து அரிச்சந்திரதோட்டி கேட்கிற விதங்காண்க.

அரிச்சந்திரன் சொல்-தரு

காவலுக்குள்வந்ததாரடி-அடி துஷ்ட
கள்ளியேநீ யெந்தவூரடி

சேவகனுத்திரவன்றி சேயனைக்கொளுத்துகிறாய்
ஆவலாய்நடுஜாமத்தி லழுகிறாய்ஓழுகிறாய் காவ

சர்திரவதி சொல்லல்.

அரசிலிருந்தயென்னை பாரோஒருபுலையன் அடிவாடி
போடியென்றும் அழைக்கவைத்துதேதெய்வம் அ

அரிச்சந்திரன்.

திருடியாரடிநீலி தெய்வமேயென்றழுது
முரட்டுத்தனமாய்நீயைமூட்டுறாய் திருட்டுப்பேயே

சந்திரமதி.

பேயும்பிசாசுமல்ல பெண்ணிலோர்பாவியையா
பெற்றமகனை துஷ்ட பாம்புக்கிரைகொடுத்தேன் அ

அரிச்சந்திரன்.

பெற்றமகனென்றுசொல்லி அர்த்தராத்திரிவேளைதனில்
எத்துகிறாய்கள்ளபிண மெடடிநடடி அடி காவ

சந்திரமதி.

எடடியெடடியென்று யிமங்காக்கும்புலையன்
நடடியென்றுரைக்க நான்முகனமைத்தானே அ

அரிச்சந்திரன்.

காப்பணமும்வாய்க்கரிசி கட்டளைக்கொடுக்காமலென்
காவலையேமாற்றிநடு ராவிலேயெரித்தகள்ளி காவ

சந்திரமதி.

அரிசியுங்காப்பணமும் யாரைப்போய்கேட்பேனான்
அரியக்கடனைப்பட்டு பரதேசியானேனே அ

அரிச்சந்திரன்.

உள்ளங்கைபோலேதாலி உன்கழுத்தில்மின்னுதடி
கள்ளிபறைவிற்றுளந்தன் கட்டளையைத்தாடிபடி காவ

சந்திரமதி.

அரன்மாலும்பிறமனு மறிந்ததில்லையோ அய்யோ
பறையன்பார்க்கவென்ன பாதகஞ்செய்தேனோ அ

அரிச்சந்திரன்.

பிராமணரன்காணுரென்று பொய்மொழியினைத்துகிறாய்
மர்ம்மமொன்றறிகிலேனுன் மன்னனின்பேருமென்ன

சந்திரவதி.

மன்னனரிச்சந்திர மகாராஜனென்பார்கள்
மாண்டமகன்தேய தாசனென்சுதனையா

வசனம்.

இவ்விதமாக சந்திரவதிபேரைச்சொல்லி புலம்பினதைக்கோட்ட அரிச்சந்திரமகாராசன் தன் பிள்ளையென்றறிந்து பிரலாபிக்கின்றது,

தரு-இம்-சாமா-ஏகதாளம்.

ஆழிசூழயோத்தி அரசாட்சி செய்வாயென் றப்பனேபுகழ்ந்தேன் மனமகிழ்ந்தேன் திண்புகழ்ந்தேன்அப்பனே இதுக்கெப்படி எ எ எ

அப்பாமகனேயினி எப்போ காண்பேறன் ஐயையோ தெய்வமே யாரைநொய்வனே இனிஉய்வனே அன்னமேயடா சொர்ணமே அப்பா சொ சொ சொ

ஆருமென்னிடபேரை யிகழ்ந்திட எடுத்தீதனைஜடலம்முனிகடலம் விதிப்படலம் ஆலமுண்டவன் கோலமா அப்பா கோலமா கோ கோ

உன்னைப்பிரிந்திந்த மண்மேலிருந்திட என்மனம் வருமோ இதுதகுமோ பொதுவாகுமோ எண்ணிடேன் ஆவிநண்ணிடேனப்பாநண்ணிடேன்.ந-ந

நான்எண்ணின எண்ணங்கள் நன்றல்லவென்று நீ மண்ணின்மேல் படுத்தாய் முகங்கடுத்தாய் எனைவிடுத் தாய் இந்தவிதிக்குநான் என்னசெய்வேனினி மைந்தனே மைந்தனே மைந்தனே

வசனம்.

பெண்ணே பொய்சொல்லக் கூடாதென்றுபுலையனு க்கு அடிமையானேன் நீ அடிமையாயிருக்கும் ஐயரைக் கேட்டு காப்பணமும் முழந்துண்டும் மாத்திரம் வாங்கி வாபெண்ணே.

சுடலையைவிட்டு வேதியரிடம் வரும்போது காசி ராஜன் பிள்ளையைக்கண்டு நடுஜாமவேளையில் தன்பிள்ளை யென்று புலம்புகிற விதங்காண்க.

இ-ம்-சாமா-ஏகதாளம்.

விதியோ விதியோ எவர்சதியோ அப்பாகாட்டில் வி ழுந்துகிடக்க பாவிதுடிக்க கையாலெடுக்க வைத்தா னே பிரமன்செத்தானே அப்பா செ-செ

கல்லும்முள்ளும்உருத்த காட்டில்மிருகம்தீண்ட க ண்ணேயிங்கு படுத்தாய் காஷ்டம் விடுத்தாய் வேஷ்டை கொடுத்தாய் காலமா இதுகோலமா-மூனிஜாலமா

ஆருமற்றபரதேசிபோலலேய அண்டர்செய் சதியோ பிரமன்விதியோ நீசெய்சதியோ அப்பனே இதற்கெப் படி மனம் ஒப்புமா-ஒ-ஒ

பொது- விருத்தம்.

மாசிலா தவத்தாலீன்ற மகன்றனைக்காட்டில்வைத்து
கூசியவனத்தில்சந்திர மாவதிவருகும்போது
காசிவாழரசன் தூதர் கள்ளரைபிடிக்கவங்கே
பேசியபிவள்தானென்று பிடித்திட்டாரடித்திட்டாரே.

காசிராஜன்சபைக்கு கொண்டுபோகிற இந்திரசபா.

நடிதாசன்சுதனுக்கிடர் நினைத்ததுரோகியை
காமறிந்தோம்தாமதமேன் நடத்திவருவீர்
பாலனைவதைசெய்திடுங் கொடும்பாவிதானிவள்
காலன்விடுந்தூதரைப்போல் கட்டிபிழுங்கள்

கண்டறியோமென்றுணர்ந்தோர் கடுந்தொழில் செய்தாய், எண்டிசையிலெம்மைவிட எவர்களைக்கண்டாய், கண்கள்கூசும் இரவிற்றிரியுங் கள்ளிபாமித்த சண்டாளியைக்கொண்டுவந்தோம் தெண்டனைசெய்வீர்.

தூதாசொல்ல சந்திரமதி யம்பனைப் பார்த்து

காசிராஜன் மந்திரிகள்சொல் விருத்தம்.

கள்ளியென்றுரைக்கலாமோ கருத்திலும் நினைக்கலாமோ, கள்ளியின்குறியுங்காணும் கபடமாய்மொழியுங்காணும், கள்ளியென் றுரைக்கோமையா காசிவாழ்வேந்தேகேளாய், கள்ளியென்றுரைத்ததூதர்கள்ளர்தான் கள்ளர்தானே.

காசிராஜனும் மதனவல்லியும் சொல் தரு.

இ-ம்-கண்டா-ரூபகம்.

(காசி) தூதர் சத்தியமாகசொல்லுகிறார் கேளுங்கள் மர்

திரிமாரே இந்த துஷ்டகள்ளியை சிரசாக்கினை செய்யுங்கள் மந்திரிமாரே.

(மத) திருடிப்பிழைக்குங்கள்ளி நீரத்தை விடுவாளோ மந்திரிமாரே இவள்தினைத்து நின்றதைப்பார்த்து பிறக்கப்படலாமோ மந்திரிமாரே.

(காசி) கள்ளிகள் சாமர்த்தியம் கண்டதில்லையோ நீங்கள் மந்திரிமாரே வெகுவித்தைகள் சித்துகள் கற்றிருப்பார்கள் மந்திரிமாரே

(மத) வீரவாகுவைவழைத்து விடுங்கள் கொடுங்களப்பா மந்திரிமாரே இந்தநீரக்கள்ளியைச் சற்றும்பாருமல் வதையுங்கள் மந்திரிமாரே.

வசனம்.

வீரவாகுவைப்பார்த்து சந்திரமதியை வெட்டச்சொல்ல தனக்கு அடிமையாயிருக்கும் அரிச்சந்திரனை பழைத்து வாளைக்கொடுத்து வெட்டச்சொன்னவுடன் மனந்துணிந்து சத்தியத்தை நம்பி வெட்டுகிறதிதக்காண்க

அரிச்சந்திரமகாராஜன் சொல் தரு.

உனதிஷ்டதெய்வத்தை மனதில்நினைத்துக்கொள்
    பிராணநாயகிநாயகி

எனதுசத்தியம்தில் தவறுமல்வெட்டுவேன்
    நாயகி பிராணநாயகி

கடவுளை நினைத்துக்கொள் கதறுதே பதறுதே
    நாயகி பிராணநாயகி

திடமாயுன்சிரத்தைநீ தரையிற்குனித்துப்பார்
 நாயகி பிராணநாயகி
மறவாதேதெய்வத்தை மனதில்நினைத்துக்கொள்
 நாயகி பிராணநாயகி
திறமாய்வெட்டெடன்று சிரசைக்கொடுப்பாயே
 நாயகி பிராணநாயகி

வசனம்.

அப்படியேயெல்லாம் என்மனதில் நினைத்துக்கொண்டேன் வெட்டுமையா என்பிராணநாதரே.

தேவர்கள்சொல்-விருத்தம்.

அரிச்சந்திரா பொறுபொறப்பா! அரிச்சந்திராபதரவேண்டாம், அரிச்சந்திரா வுனதுசத்தியம் அரிச்சந்திரா தவறவில்லை, அரிச்சந்திரா வுனது பாலன் அரவத்தால் மடியவில்லை, அரிச்சந்திராசுடலையவ்வ அமரர்வாழ்லோகமப்பா

வசனம்,

வெட்டவேண்டாமென்று தேவர்கள் தடுத்து தேவதாசனை எழுப்பிக்கொடுத்து சுகமாக வாழக்கடவாயென்று மகுடாபிஷேகந்தரித்து வாழ்த்தினார்கள்.

இரண்டாம்பாகம் முற்றிற்று.